www.tamilarangam.net

# மக்களே உண்மையை அறியுங்கள்.

# தோழர் சந்ததியார் கடத்தப்பட்டார்.

தோழர் சந்ததியார் அல்லது வசந்தன் என்று அழைக்கப்படும் தமிழீழ விடுதலைப் போராளி இவர், தமிழீழ விடுதலைக்காகப் போராடுவோம் என்று கூறிக்கொள்ளும் அராஜகக் கும்பலினால் 18.9.85 அன்று சென்னையில் கடத்தப்பட்டார்.

தோழர் சந்ததியார் 1970 ஆம் ஆண்டு தமிழ் மாணவர் பேரவையின் ஊடாக புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1975 இல் சிறீலங்கா அரசினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்பு தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராகவும், டாக்டர் இராஜசுந்தரம், திரு. S.A. டேவிட் அவர்களுடன் இணைந்து காந்தியத்தினூடாக மலையக தமிழ் மக்களை வடகிழக்கு பகுதிகளில் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துவதற்கு அரும்பாடுபட்டு உழைத்தவர்.

தோழர் சந்ததியார், தோழர் சுந்தரத்துடன் இணைந்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினை (PLOT) தோற்றுவித்தார். இவர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அரசியல் துறைச் செயலாளராகவும், மத்திய குழு உறுப்பினராகவும், புதியபாதை ஆசிரியர்களில் ஒருவராகவும், "தமிழீழத்தின் குரல்" வானொலிச் சேவையின் பொறுப்பாளராகவும் இருந்தபோது ஆற்றிய பணியே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOT) பரந்துபட்ட வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாகும்.

இவர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினுள், உமாமகேஸ்வரனுடைய அராஜகக் கும்பலினால் நடாத்தப்படும் போதை வஸ்து கடத்தல், தமது இயக்கத் தோழர்களையும் ஏனைய இயக்கத் தோழர்களையும் மிக மிகக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்து கொலை செய்தல், நிர்வாக சீர்கேடுகள் போன்றவற்றுக்கு எதிராக கண்டித்து உட்கட்சிப் போராட்டம் நடாத்திய காரணத்தினால் இவ்வராஜகக் கும்பலுடன் முரண்பட்டு நின்றார்.

தோழர் சந்ததியார், தமது நீண்டகால அரசியல் அநுபவத்தின் மூலம் பரந்துபட்ட மக்களை அணிதிரட்டிய ஆயுதப் புரட்சியினூடாகவே மக்களின் விடுதலையை, மக்களால் தமிழீழத்தில் வென்று எடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கையுடன் விடுதலைப் போராட்டத்தில் முன்னின்று உழைத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற வருடம் பிற்பகுதியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினுள் (PLOT) உள்ள அராஜகக் கும்பலின் கொலை முயற்சியில் இருந்து தப்பிய பின்னரும் கூட, கொள்கையில் தளராத நம்பிக்கையுடனும், விடுதலைப் போராட்டத்தை சரியான பாதையில் முன்னெடுப்பதற்கு அயராது உழைத்தார்.

இவர் கடத்தப்பட்டதை அடுத்து, தமிழக பொலிசார் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த (PLOT) பலரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளார்கள். அத்துடன் தோழர் சந்ததியாரை உடனடியாக விடுவிக்குமாறு தமிழக அரசியல் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இச்சம்பவம் இந்திய மண்ணில் நடைபெற்றுள்ளதால் இந்திய பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்திக்கும், தமிழக முதலமைச்சர் திரு. M.G.ராமச்சந்திரனுக்கும் இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தமிழீழத்தில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் அவசரத் தந்திகள் சென்றவண்ணம் உள்ளன.

மக்களின் விடுதலைக்காக தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து போராடிய விடுதலைப் போராளிகளை கொலை செய்யும் கொலை வெறியர்களை மக்களே இனங்கண்டு தக்க தண்டனை அளியுங்கள்.

Tamils For A Democratic Eelam,
B.M Box 4338,
London WC1N 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்